4. கவன ஈர்ப்பு

பென்னாகரம் தொகுதி பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள வறண்ட ஏரிகளுடன் பஞ்சப்பள்ளி வாய்க்காலை இணைக்கும் பணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி.கே. மணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளில் வரத்து வாய்க்கால்கள் பாதிக்கப்பட்டு வறண்டு கிடக்கும் ஏரிகளுடன் பஞ்சப்பள்ளி வாய்க்காலை இணைக்கத் திட்டமிடப்பட்டு வேலை தொடங்கும் நிலையில், நிலுவையில் உள்ளதால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி தெரிவித்துள்ளபடி தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்க்கால் அமைக்கும் திட்டம் எதுவும் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. பணிகள் நடைபெறவுமில்லை. இத்திட்டம் ஆய்வில் மட்டுமே உள்ளது.

2. பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள 9 ஏரிகளுக்கு சாகுபடிக்குத் தண்ணீர் கிடைத்திட சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் ஜர்தலால் ஏரியிலிருந்து மதிகொண்பாளையம் ஏரிக்கு வரும் கால்வாயின்

கொள்திறனை அதிகரித்து தனியாக ஒரு கிளைக் கால்வாய் வெட்டி, பாசன உறுதிசெய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.436 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி அவர்களின் ஒத்திசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் *500* ஏக்கர் நிலங்கள் பாசன பயன்பெறும்.

3. இத்திட்டத்தினால் கீழ்க்கண்ட ஏரிகள் பயனடையும்:

(*1*) கல்லேரி (*2*) தோட்டலான் ஏரி (*3*) பாப்பாரப்பட்டி பெரிய ஏரி (*4*) அம்மன் ஏரி (*5*) கஞ்சன் ஏரி (*6*) மதஹள்ளி ஏரி (*7*) பாப்பாரப்பட்டி சிறிய ஏரி (*8*) ஜிட்லகாரன்பட்டி ஏரி (*9*) பாலவாடி ஏரி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவையிலே வைக்கப்பட்ட விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே உண்மைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சேர்க்கவேண்டிய சில செய்திகளும் அங்கே விடுபட்டிருக்கின்றன. எங்களுடைய பெண்ணாகரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மக்கள் நிறைந்த பகுதி. இந்தப் பகுதியிலே நீர்ப்பாசன அணைத் திட்டங்கள் ஏதுமில்லை. அதிலும் பெண்ணாகரம் ஒன்றியத்தைப் பாதி என்று எடுத்துக்கொண்டால் பாப்பாரப்பட்டியை மையமாகக் கொண்டிருக்கக்கூடிய பகுதிகளிலே *20*-க்கு மேற்பட்ட ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளுக்கு வரத்து வாய்க்கால்கள் எல்லாம் மூடப்பட்டு மழைக் காலங்களிலேகூட அந்த ஏரிகள் நிரம்புவதே கிடையாது. அப்படி ஏரி மழைக் காலங்களிலேயே நிரம்பாத காரணத்தினாலே பாசன நீர் இல்லாமல் வாய்க்கால்கள் எல்லாம் வறண்டு கிணறுகளுக்கு நீர் ஊற்று வறண்டுவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ஜி.கே. மணி: அந்தக் காரணத்தினாலேதான் அருகிலே இருக்கக்கூடிய சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து மதிகொண் பாளையம் வரையிலே செல்லக்கூடிய பஞ்சப்பள்ளி வாய்க்காலை இந்த ஏரிகளுடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து *5, 6* ஆண்டுக் கால்மாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அந்த வகையிலே, இரண்டு கிலோமீட்டருக்கு மிகக் குறுகிய

தொலைவிலே அந்த வாய்க்கால் செல்கிறது. அந்த வாய்க்காலிலேயிருந்து அங்கே இணைப்பு ஏற்படுத்திவிட்டால், திருமல்லிவாடி ஏரி, கிட்டம்பட்டி ஏரி, வத்திமரத்தள்ளி ஏரி, தொட்டலாவள்ளி ஏரி, பனைக்குளம் பெரிய ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய ஏரி, சஜ்ஜலள்ளி ஏரி, பாப்பாரப்பட்டி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விதான் கேட்கலாம் நீங்கள். அவ்வளவு விளக்கம் சொல்லக்கூடாது.

திரு. ஜி.கே. மணி: ஏரி பெயர்கள் எல்லாம் இல்லாமல் இருக்கின்றன. அதற்குத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயர் எல்லாம் தெரியும், அரசாங்கத்திற்குத் தெரியும்.

திரு. ஜி.கே. மணி: சஜ்ஜலள்ளி ஏரி, சாமன ஏரி, எட்டியாம்பட்டி ஏரி, பிளப்பநாயக்கன்பட்டி ஏரி, வேலம்பட்டி ஏரி, ஜிட்லகாரன்பட்டி ஏரி, பாலவாடி ஏரி, மாங்காய்ப்பட்டி ஏரி, பூசல்பட்டி ஏரி, பள்ளிப்பட்டி ஏரி, கோணங்கிநள்ளி ஏரி ஆகிய....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியையே ஒரு சுற்று சுற்றிக் காட்டிவிட்டீர்கள்.

திரு. ஜி.கே. மணி: இந்த ஏரிகளை இணைத்துவிட்டீர்கள் என்று சொன்னால், அந்தப் பகுதி முழுவதும் பாசனம் பெறும். கிணறுகளுக்கு நீர் ஊற்று கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இது நீண்ட நாளைய கோரிக்கை. தற்போது அரசில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு டெண்டர் விடும் நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, பணி தொடங்குகின்ற நிலையிலே இருக்கக்கூடிய இந்தப் பாசன வாய்க்கால் திட்டத்தை, இணைக்கும் பணியை உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் திட்டம் வேலை தொடங்கும் நிலையில் இருக்கிறது என்று

சொன்னார். உண்மை நிலை என்னவென்றால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்க்கால் அமைக்கும் திட்டம் எதுவும் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. பணிகள் நடைபெறவும் இல்லை. இத்திட்டம் ஆய்வில் மட்டுமே உள்ளது. பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள 9 ஏரிகளுக்கு சாகுபடிக்கு தண்ணீர் கிடைத்திட சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் ஜர்தலால் ஏரியிலிருந்து மதிகொண்பாளையம் ஏரிக்கு வரும் கால்வாயின் கொள்திறனை அதிகரித்து தனியாக ஒரு கிளைக் கால்வாயை வெட்டி பாசனம் உறுதி செய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.430 லட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி அவர்களின் ஒத்திசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், கல்லேரி, தோட்டலான் ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய ஏரி, அம்மன் ஏரி, கஞ்சன் ஏரி, மதஹள்ளி ஏரி, பாப்பாரப்பட்டி சிறிய ஏரி, ஜிட்லகாரன்பட்டி ஏரி, பாலவாடி ஏரி ஆகிய 9 ஏரிகள் பயன்பெறும். இதனால் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபடி பஞ்சப்பள்ளி வாய்க்கால் ஏரி உட்பட இன்னும் சில ஏரிகளை இதில் சேர்த்து இருக்கின்றார்கள். இதனையும் ஒத்திசைவுக்கு திரும்ப அனுப்புகின்றபொழுது அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதனை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 2001-2002ஆம் ஆண்டிற்கான 24 முதல் 28 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS